# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 18வது கூட்டம் 25-07-2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் மாலை 6:30 மணிக்கு பங்குதந்தையின் ஆரம்ப செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அன்றைய தினம் அடுத்த ஆண்டில் இருந்து எமது மீட்பின் அன்னை மறைத்தளத்தினையும் மறைத்தள பங்கு மக்களையும் தொடந்து வழி நடத்திச் செல்ல வந்திருக்கும் புதிய பங்கு தந்தையான அருட் திரு யூட் அமலதாஸ் அடிகளார் வருகை தந்திருந்தார். அன்றைய தினம் அருட் சகோதரி கார்மேல் யோன்பிள்ளை, திருமதி கலிஸ்ரா தவராஜா, திரு சூசை மாணிக்கம், அம்புறோஸ், விஜி ஆகியோர் சமூகம் தரவில்லை. கடந்த மாத கூட்ட அறிக்கையினை செயலாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது. சில திருத்தங்கள் செய்த பின்னர் கூட்ட அறிக்கையினை திரு அமீர் அவர்கள் முன்மொழிய திரு றொபின் அவர்கள் வழி மொழிந்தார்.

பங்கு தந்தையும், பங்கு சபை உறுப்பினர்களும் புதிய பங்கு தந்தையான யூட் அமலதாஸ் அடிகளாரை மகிழ்ச்சியோடு வரவேற்றுக் கொண்டு கூட்டத்தில் வருகை தந்திருந்த அனைத்து உறுப்பினர்களும் தங்களையும் தங்கள் பணிகளையும் அறிமுகம் செய்து கொள்ளும் படி பங்குதந்தை கூறினார். அந்த வகையில் ஒவ்வொருவரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டு தங்கள் பணிகளையும் எடுத்துக் கூறினார்கள். தொடர்ந்து அருட் தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் தங்களை அறிமுகம் செய்தார். மீட்பின் அன்னை மறைத்தள பங்கு தமக்கு 4வது பங்கு என்றும் அடுத்த ஆண்டில் இருந்து இதனை பொறுப்பேற்று வழிநடத்தி செல்வதாகவும் அத்தோடு தற்போதைய பங்குத்தந்தை என்னென்ன பணிகளை செய்தார்களோ அவற்றை தொடர்ந்து செய்வதாகவும் அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு தந்து உதவ வேண்டும் என்றும் அறிமுகம் செய்த எல்லோருக்கும் நன்றிகள் கூறினார். அன்றைய தினம் கூட்டத்திற்கு சமூகம் தராதவர்களையும் அவர்கள் பணிகளையும் பங்குதந்தை அவருக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் பங்குதந்தை அவர்கள் கூறுகையில் அவர் தாயகத்தில் பணிகள் பல செய்தார் என்றும், தன்னுடன் உதவி பணியாளராக இருந்தார் என்றும் அவருடைய சில சிறப்பு தன்மைகளையும் அனைவருக்கும் எடுத்துக் கூறினார். அத்தோடு எங்கள் மீட்பின் அன்னை மறைத்தளத்தில் என்னென்ன பணிகள் நடைபெறுகின்றனவோ அவற்றையெல்லாம் சிறப்பாக முன்னெடுத்து செய்து கொள்ள வேண்டும் என்றும் எந்த வித ஆதங்கமும் கொள்ளத் தேவையில்லை. அனைவரும் பணிகளுக்கு உதவ வேண்டும் என்றும் புதிய பங்குதந்தையுடன் கலந்து ஆலோசித்து எல்லாவற்றையும் சிறப்பாக செய்து கொள்ள வேண்டும் என்றும் பங்குதந்தை விளக்கி கூறினார். மற்றும் மீட்பின் அன்னை மறைத்தளத்தினால் முன்னெடுக்கப்படும் மருதமடு மாதாவின் பெருநாள் 31-07-2010 சனிக்கிழமை 4 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றத்துடன், திருப்பலியும் சுற்றுப்பிரகாரமும் இடம் பெறும் என்றும், நற்கருணை எழுந்தேற்றம் அருட் தந்தை யூட் அமலதாஸ் அவர்கள் முன்னின்று செய்வார் என்றும், தந்தை கூறினார். ஒலி அமைப்பினை வழமை போல் யூலியன் அவர்கள் பொறுப்பெடுத்து செய்வார் என்றும் சுற்றுப்பிரகார வேளையில் செபமாலை சொல்பவர்கள் சுற்றுப்பிரகாரத்தின் மத்தியில் சென்று கொண்டு சொல்ல வேண்டும் என்றும் காரணம் இரு பக்கமும் வருபவர்கள் ஒரே நேரத்தில் விளங்கிக் கொள்வதற்கு இலகுவாக இருக்கும் என்றும், இதனை பாடகர் குளாம் உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு செய்யும் படியும் தேவாவிடம் தந்தை கூறினார்.

பாடகர் குளாம் உறுப்பினர்கள் தங்கள் வழமையான இடத்தில் நின்று பாடுவார்கள் என்றும் நிகழ்ச்சி மேடை அலங்காரம் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தண்ணீர் பந்தல் குளிர் பானங்கள் வழங்கும் பொறுப்பினை திரு கெங்கா அவர்களும் றொபின் அவர்களும் பொறுப்பெடுத்து செய்வதாக திரு றொபின் அவர்கள் கூறினார். மடுமாதா பெருநாளை முன்னிட்டு ஆயத்த பணிகளை செய்கின்ற அனைவரையும் முதல் நாள் மாலை ஆயத்த திருப்பலிக்கு வந்து கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பங்குதந்தை கூறினார். மடுமாதா சுற்றுப்பிரகாரத்தை முன்னிட்டு நகர அதிகாரிகளுடன் பங்குதந்தை கலந்துரையாடிய போது இரு பக்கமும் அமைந்துள்ள வாகன வீதிகள் போக்கு வரத்திற்கு முக்கியத்துவம் என்பதால் அவர்கள் கூடியளவு ஒரு பகுதியை ஒதுக்கி வாகனங்கள் போவதற்கு ஏற்ற மாதிரி அமைத்து தரும்படியும் 15 உதவியாளர்களையும் அதற்கு உதவ தரும் படியும் அவர்கள் கேட்டுக் கொண்டதாக அன்றைய தினம் தந்தை கூறினார். ஆனால் சிறுவர்களின் நன்மை கருதி கடந்த ஆண்டு வழங்கியது போன்று இந்த முறையும் குறிப்பிட்ட நேரம் அதனை முழுமையாக ஒதுக்கி தரும்படி நகர அதிகாரிகளிடம் உரையாடிப் பார்க்கும் படி பலர் கருத்துக்கள் தெரிவித்தனர்.

மற்றும் புதுவாழ்வு சபையினரால் 14-08-2010 அன்று **Rigo** செல்ல ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் அங்கு காலை 9 மணிக்கு திருப்பலி இடம் பெறும் என்றும் அதற்கான ஆயத்த ஒழுங்குகள் திரு யூலியன் அவர்கள் மேற் கொண்டுள்ளதாக கூறினார்.

ஆலயத்தின் பின்புறமாக அமைந்துள்ள வாகன தரிப்பிட வேலைத்திட்டம் அதனை செய்வதற்கு முதல் பசாரோடு அமைந்துள்ள இரண்டு கரையோர பகுதிகளையும் முதலில் செய்து முடிக்க வேண்டும் என்றும் பங்குதந்தை கூறினார். அந்த வகையில் அவற்றை செய்வதற்கு மடுமாதா பெருநாளை முடித்துக் கொண்டு அதனை செய்யத் தொடங்கலாம் என்று திரு றொபின் அவர்கள் கூறினார். அத்தோடு பசார் துப்பரவு செய்ய ஒரு நாள் சிரமதானம் செய்ய வேண்டும் என்றும் அதற்கு கமரா **(camara)** போட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.மேலும் எமது பங்கு ஆலயத்தில் 6 மாதங்களுக்கு இரண்டு குருவானவர்கள் பணியாற்றி வருகின்றமையால் ஒரு குருவானவர் கற்றுக்கீசனை பொறுப்பெடுத்து செய்வது நல்லம் என்றும் அவற்றில் முக்கியமாக பீடப்பணியாளர்கள் காணிக்கை எடுப்பவர்கள் திருமண ஆயத்த நெறி போன்ற முக்கிய பொறுப்புகளையும் நல்ல முறையில் வழி வகுத்து தந்தருள வேண்டும் என்றும் திரு யூலியன் அவர்கள் கூறினார். அத்தோடு மறுபடியும் இதைப்பற்றி கேட்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார். இறுதியாக புதிய பங்கு தந்தையான அருட்திரு யூட் அமலதாஸ் அடிகளாரின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

அருட். தந்தை அன்றூ தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்